RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt224s-22258

# வைதீக வழிபாட்டு மரபுகளில் காணலாகும் சூழலியல் பங்களிப்புகள்

ப. நவசக்திவேல் [அ, *], க. புவனேஸ்வரி [அ]

[அ] தமிழ்த்துறை, தேசியக் கல்லூரி, (பாரதிதிசன் பல்கலைக்கழகத்துடன் இணைவுபெற்றது), திருச்சிராப்பள்ளி-620001, தமிழ்நாடு, இந்தியா

# Ecological Contributions to Orthodox Worship Traditions

P. Navasakthivel [a, *], K. Bhuvaneswari [a]

[a] Department of Tamil, National College (Affiliated to Bharathidasan Uiniversity), Tiruchirappalli-620001, Tamil Nadu, India

* Corresponding Author: navasakthivel84@gmail.com

Received: 27.09.2022
Revised: 02-11-2022
Accepted: 06-11-2022
Published: 01-12-2022

Check for updates

**ABSTRACT**

From ancient times to the present day, the worship traditions of the Tamils form evidence to reveal the nature of the period. From nature worship to the worship of a variety of religions, they have had a great impact on human beings and the living beings in the world in their lives. The traditions of Tamil worship originated in the prehistoric period. An extension of nature worship is still seen in Tamil worship. An example of this is the ancient Tamil festival of 'Pongal' worship. Tamils are followers of different religions. In that sense, this article focuses on the elements that protect and maintain the environment in orthodox times and explains their role.

**Keywords:** Orthodox Worship, Environment, Nature Worship, Tamil Worship

## முன்னுரை

தொல் பழங்காலம் முதல் இன்றுவரை தமிழரின் வழிபாட்டு மரபுகள் அந்தந்த காலக் கட்டத்தின் தன்மையை வெளிப்படுத்தும் சான்றுகளாக அமைகின்றன. இயற்கை வழிபாடு முதல் பல்வேறு விதமான சமயங்களின் வழிபாட்டு மரபுகள் மனிதனுக்கும், உலகத்திலுள்ள உயிர்களுக்கும் அவற்றின் வாழ்வில் பெருமளவு தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன. குறிப்பாக வைதீக சமயங்கள் என அழைக்கப்பட்ட சைவ, வைணவ வழிப்பாட்டு மரபுகளில் சூழலியலை காத்துப் பேணும் வகையில் அமைந்த கூறுகளை இக் கட்டுரையில் காண்போம்.

## வைதீகச் சமயங்கள்

வைதீக சமயங்கள் எனப்படுபவை சைவ, வைணவ சமயங்களாகும். இவை வேத நெறியையும், ஆகம முறையையும் பின்பற்றுபவையாகும். சங்ககாலத்தில் காணப்பட்ட சைவ, வைணவ சமயங்கள் களப்பிரர்காலத்தில் தங்கள் செல்வாக்கினை இழந்தன. பிறகு கிபி6ம் நூற்றாண்டிளிருந்து எழுசிப்பெற்றன. இதற்கு நாயன்மார்களும், ஆழ்வார்களும், காரணமாக இருந்தனர். இந்த எழுச்சி இறைபக்தி இயக்கமாக தெற்கிலிருந்து வடக்கு நோக்கிப் பரவியது. இச் சமயங்களின் இருப்பும் சிறப்பும் மக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டு இன்றுவரை உயிர்ப்புடன் உள்ளது.

## சைவமும் இயற்கையும்

சைவ சமயத்தின் முழு முதற் கடவுள் சிவபெருமான் ஆவார். சைவ சமயமானது மூன்று பிரிவுகளாக காணப்படுகின்றது. காசுமீர சைவம், சித்தாந்த சைவம், வீர சைவம் ஆகும். மேலும் பாசுபதம், மாவிரதம், காபாலிகம், வைரவம், வாமம், ஐக்கிய வாத சைவம், பாடண வாதம், பேத வாதம், சிவசம வாதம், சிவசங்கிராந்த வாதம், ஈசுர அவிகார வாதம், சிவாத்துவிதம் போன்ற திறங்களை உள்ளடக்கியது. சிவப்பெருமான் படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்ற ஐந்து தொழில்களை செய்வதாக சைவ சமய கருத்துக்கள் காணப்படுகின்றன

சைவ சமயத்திலே இறைவன் உறைகின்ற கோயில் மிக முக்கியமானதாக கருதப்படுகின்றது. அதனை மூர்த்தி, ஸ்தலம், தீர்த்தம், என அழைப்பார்கள். மூர்த்தி என்பது இறைவனை குறிப்பது, ஸ்தலம் என்பது அக்கோயில் அமைந்துள்ள இடம் அல்லது ஊரினைக் குறிப்பதாகும். பொதுவாக திருக்கோயிலில் ஸ்தல விருட்சம் என்ற மரம் புனிதமாக கருதப்படும். இது இயற்கை முதன்மை படுத்தும் செயலாக கருதலாம். மேலும் அத் தாவரத்தை பாதுகாக்கும் முயற்சியாகும். சில சிவ ஸ்தலங்களுக்கு மரத்தின் பெயரை வைத்து அழைக்கும் மரபு உண்டு. சான்றாக சிற்றம்பலம் - சிதம்பரம் என அழைக்கப்படும் கோயில் நகரம் 'தில்லை 'என்ற மரத்தின் பெயரால் அழைக்கப்பட்டது. மேலும் அங்கு நடனம் புரியும் ஈசனை தில்லை நடராசன் என்றும், அவருக்கு பூசனை செய்யும் அந்தணர்களை தில்லைவாழ் அந்தணர் என்னும் அளவிற்கு மரம் என்ற சூழலுக்கு முதன்மையான காரணிக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது.

நடராசர் கோயிலின் ஸ்தல விருட்சம் தில்லை மரம் 'மாங்குரோவ்' எனப்படும் அலையாத்தி தாவர வகையை சார்ந்தது ஆகும். இத்தாவர வைகை ஆழிப்பேரலை தடுக்கும் தன்மை கொண்டதாக அறிவியல் அறிஞர்கள் கருதுகின்றனர். எனவே திருக்கோயிலில் காணப்படும் ஸ்தல விருட்சங்கள் அவ் நிலவியல் கூறுகளுக்கு ஏற்ப சூழலியலை காக்க அமைந்த குறியீடுகள் என கொள்ள ஆய்விற்கு இடமுள்ளது

'தீர்த்தம்' என்று வடமொழியால் அழைக்கப்படும் புனித நீரானது இறைவனின் வாழிப்பாட்டிற்கும், இறையன்பர்களுக்கு 'ப்ரசாதமாகவும்' வழங்கப்படுகின்றது. திருக்கோயிலின் குளம் நீர்மேலாண் மையை செய்யும் தன்மையாக கருதலாம்.

## சைவ இலக்கியமும் இயற்கையும்

சைவ இலக்கியத்தில் முதன்மையாக கருதப்பெறும் தேவாரத்தில் திருஞான சம்பந்தர் திருவையாற்று பதிகத்தில் சிவபெருமான் அருள்புரியும் அவ்விடமானது இயற்கை சூழலை பல்லுயிர் தன்மையினை

"மான்பாய வயலருகே மரமேறி

மந்திபாய மடுக்கள் தோறும்

தென்பாய மீன்பாய செழுங்கமல

மொட்டலரும் திருவையாறே" (Anandhan, 2002)

இப்பதிகமானது பல்லுயிர் சூழலையும், சூழலியல் கூட்டமைப்பை விளக்கும் தன்மையாக அமைந்துள்ளது.

சமண சமயத்திற்கு எதிராக சைவத்தை உயர்த்திப்பிடித்த திருநாவுக்கரசர் பல்லவ மன்னனால் நீற்றறையில் அடைத்த போது

"மாசில் வீணையும் மாலை மதியமும்

வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்

மூசு வண்டறைப் பொய்கையும் போன்றதே

ஈசன் எந்தை இணையடி நிழலே" (Anandhan, 2002)

என இறைவன் சிவபெருமானின் திருவடியை மாலை, மதியம், தென்றல், இளவேனில் பொய்கை என்ற வாழிட சூழல்களை ஒப்புமையாக கூறி சூழலை முதன்மைப் படுத் தியுள்ளார்.

மாணிக்கவாசகர் சிவபெருமானை போற்றுகின்ற பொது

"புல்லாய் பூடாய் புழுவாய் மரமாகிப்

பல்விருக மாகி பறவையாய் மனிதராய்

செல்லாஅ நின்ற இத்தாவரச் சங்கமத்துள்" (Arivudainambi, 2017)

என உயிரின பரிணாமத்தையும், வாழிடமாகிய பூமியின் உயிர் பல்வகைத் தன்மைப் பற்றி கூறுகின்றார். மேலும் நீரின் முக்கியத்துவத்தை

"தண்ணீர் பந்தர் சமயம்பெற வைத்து

நன்னீர் சேவகனாகிய நன்மையும்" (Arivudainambi, 2017)

என்ற பதிக வரிகள் உணர்த்துகின்றன.

## வைணவம் - இயற்கை பேணுதல்

தொல்காப்பியர் குறிப்பிடும் 'மாயோன்' எனற திருமால் முல்லைத் திணைக்குரிய தெய்வமாகும். காடுறை தெய்வமாக கருதப்படுகிறது. திருமால் மலை, மேகம் போன்றவற்றின் குறியீடாக கருதப்படுகின்றார் ஆதனாலே கார்மேகம் என்ற பெயரும் அவரின் தங்கையாக 'மாரி' என்று மழைக் கடவுள் அழைக்கப்படுவதாக வெகுஜன மக்களிடம் காணப்படுகின்றது. மாயோன் திருமால், பெருமாள் என்று அழைக்கப்படுபவர் விஷ்ணு என்ற கடவுள் ஆவர். விஷ்ணு வைணவத்தின் முழுமுதற் கடவுளாவார்.

விஷ்ணு எனற கடவுளை ஏற்றுக் கொண்டவர்கள் வைணவர் என அழைக்கப்படுகின்றனர். சுமார் இருபது வைணவ சமயங்கள் இருப்பதாக கே. வரதராசன் என்ற அறிஞர் குறிப்பிடுகின்றார். ஸ்ரீமத்வர், ஸ்ரீவல்லபாசாரியார், மீராபாய், சைதன்ய சுவாமிகள், மாலுக்தாஸ், ராமானந்தர் முதலியவர்களால் ஏற்படுத்தப்பட்ட அனைத்தும் வைணவமாகும். ஆனால் ஸ்ரீ ராமானுஜரால் உபதேசிக்கப்பட்ட சமயத்திற்கு ஸ்ரீ வைணவம் என்று பெயராகும். வடநாட்டில் கடைப்பிடிக்கும் ஸ்ரீ வைஷ்ணவத்திற்கு ஸ்ரீ சம்பிரதாயம் என்றும் அதனை கடைப்பிடிப்பவர்களுக்கு ஸ்ரீ சம்பிரதாயிகள் என்று பெயர். ஸ்ரீ ராமானுஜரால் உருவாக்கப்பட்ட ஸ்ரீ வைணவத்தில் வடகலை, தென்கலை என இரண்டு வகை உண்டு அதாவது "வேதம், சாஸ்திரம், ஸ்ரீ பாஷ்யம் முதலிய நூற்கள் வடமொழியிலிருக்கின்றன. அவைகளுக்கு ஏற்றம் கொடுக்கும் ஸ்ரீ வைணவர்களுக்கு மொழிக் காரணமாக "வடகலையார்" என்றுபெயராயிரற்று. "வடகலை" என்பதற்கு வடமொழி என்று பொருள். இவர்கள் ஸ்ரீ வேதாந்த தேசிகர் அருளிச் செய்த ரஹஸ்யங்களை அனுஷ்டிக்கிறார்கள்.

தென்மொழியால் ஆழ்வார்களால் அருளிச்செய்யப்பட்ட நாலாயிரத்திவ்ய பிரபந்தத்திற்கு ஏற்றங்கொடுக்கும் ஸ்ரீவைஷ்ணவர்கள் "தென்கலையார்" என்று மொழிக் காரணமாக அழைக்கப் படுகிறார்கள். இவர்கள் பிள்ளைலோகச்சாரியால் அருளிச்செயப்பட்ட நூற்களையும் அவைகளுக்கு கிபி14 நூற்றாண்டிலிருந்த ஸ்ரீ மணவாள மாமுனிகளால் தமிழில் எழுதப்பட்ட வியாக்கியானங்களையும் அனுஷ்டிக்கிறார்கள்" இப்படியாக வைணவ சமயத்தின் பிரிவுகள் காணப்படுகின்றன (Varadharajan, 1936).

வைணவ பன்னிரு ஆழ்வார்களில் ஒரே பெண் ஆழ்வரான ஆண்டாள் பாடிய திருப்பாவையில் 'பாவைநோன்பு' கூறப்படுகின்றது. அவ வழிப்பாட்டில் இயற்கையை முன்னிருத்தும் சூழலியல் கருத்தாக்கங்கள் காணப்படுகின்றன.

அப் பாவை நோன்பில் மார்கழி நீராட ஆற்றில் நீர்வரத்து வேண்டும். அதற்கு மழைப் பெய்ய வேண்டும். மழையை வருவிக்க கண்ணனை (திருமாலை) வேண்டுகின்றாள் மேலும் கண்ணனையே மழையாக

“ஆழி மழைக் கண்ணா! ஒன்றும் நீ கை கரவேல்

ஆழியுள் புக்கு முகந்துகொடு ஆர்த்தேறி

ஊழி முதல்வன் உருவம்போல் மெய்கருத்துப்

பாழியம் தோளுடைப் பற்பநா பன்கையில்

ஆழிபோல் மின்னி வலம்புரிபோல் நின்றதிர்ந்து

தாழாத சார்ங்கம் உதைத்த சரமழைப்போல்

வாழ உலகினில் பெய்திடாய்”

என பாவை வழிபாட்டிற்கு முதன்மை காரணமாக மழை விளங்குவதையும் அது எவ்வாறு உருவாகின்றது என்பது பற்றியும் குறிப்பிடுகின்றது. அம் மழையானது உயிர் வாழ்க்கைக்கு தேவையானது என்ற சூழலியல் கருத்தும் முன்னிறுத்தப்படுகின்றது.

பாவை நோன்பு இருப்பதினாலே கிடைக்ககூடிய பலனாக ஆண்டாள் கூறுவது

“ஓங்கி உலகளந்த உத்தமன் பேர் பாடி

நாங்கள் பாவைக்குச் சாற்றுநீர் ஆடினால்

தீங்கின்றி நாடெல்லாம் திங்கள்மும் மாரிபெய்து

ஓங்கு பெருஞ்செந்நெல் ஊடு கயலுகளப்

பூங்குவளைப் போதில் பொறிவண்டு கண்படுப்பத்”

இதில் ‘திங்கள்மும் மாரிப்பெய்து’ என்ற வரிகள் மாதம் மூன்று மழை பெய்யவேண்டும். இதனை பெரியவாச்சான் பிள்ளை அவர்கள் “அவர்கள் ஒன்பது நாள் வெயிலும் ஒருநாள் மழையும் என விளக்கம் அளிக்கின்றார். பத்து நாளுக்கு ஒருமுறை என்று மாதம் மும்முறை மழைப் பெய்தால் நிலம் ஊறு எண்ணை விட்டாற் போல இருக்கும் என்கிறார் அவர். அதாவது உச்சந்தலையில் இடப்படும் எண்ணெய்த் தலை முழுதும் ஊறிக் கிடப்பது போல் நிலம் ஊறியிருக்குமாம். அது காயிந்து போவதற்குள் அடுத்த மழை கிடைத்துவிடும் இத்தகைய பருவநிலை அத்தகைய தமிழகத்தில் இருந்துள்ளது.” (Nakkeran 2020)

## முடிவுரை

வைதீக சமயங்கள் என்று அழைக்கப்படும் சைவம், வைணவ சமயங்கள் வழிபாட்டு முறைகளில் இயற்கை என்று கூறப்படும் சூழலியல் காதுப்பேணுதல் என்பது சடங்குகளிலும், நடைமுறை வழக்கங்களில் காணமுடிகிறது.

## References

Anandhan, S. (2002) Tamililakiya Varalaru. Kanmani Pathippagam, Tiruchirappalli, India

Arivudainambi, R. (2017) Thiruvasagam, Sivanadiyar Thirukuda Arakattalai, Karaikal, India

Nakkeran, (2020) Neer Eluthu Tamilakathin Thanner Avanam, Kadodi Pathippagam, Nannilam, India

Varadharajan, T. (1936) Sir Vaishnava Samaya Saram, Sri Venkatta Printers, Thirupapuliyur, India

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Authors have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author(s) 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License